## OS.No.130/2023, Dated 18.09.2025

The witness sworn under Oaths Act 1969 on this the 18th day of Sep 2025.

**வா.சா.1 – செல்வம் த/பெ. அப்பாயிகவுண்டர் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் தேசூரில் வசித்து வருகிறேன். வாதி எனது தம்பி ஆவார். அவர் தேசூரில் உள்ள இடம் சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தின் சர்வே எண் 482/1A மற்றும் அதன் விஸ்தீரனம் 46 செண்டு ஆகும். மேற்படி சொத்தை வாதி தேவபால் நயினாரிடமிருந்து வாங்கினார். 1986ம் ஆண்டு அந்த சொத்தை கிரையம் வாங்கினார். தேவபால் நயினார், ரவி முதலியாரிடமிருந்து கிரையம் வாங்கினார். ரவி முதலியாரிடமிருந்து அவர் எப்போது கிரையம் வாங்கினார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. ரவி முதலியார் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். ரவிமுதலியார் தேசூரைச்சேரந்தவர் தான். ரவிமுதலியாருடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 2 நபர்கள் ஆவார்கள். ரவிமுதலியார் குடும்பத்தின் மூத்தவர் என்றால் சரிதான். ரவிமுதலியாரும் அவருடன் பிறந்த இரண்டு பேரும் ஒரே குடும்பமாக இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. ரவிமுதலியார் குடும்பத்தில் இந்த சொத்து கிரையம் வாங்கப்பட்டது எனக்கு நேரடியாக தெரியாது. ஏக குடும்பத்தில் அவர்கள் ஒன்றாக இருந்தது மூத்தவர் என்ற முறையில் ரவி முதலியார் பெயரில் அது கிரையம் வாங்கப்பட்டது என்றால் இல்லை. அது அவரது தனிப்பட்ட சொத்தாகும். ரவிமுதலியார் அந்த சொத்தை அவரது தனிப்பட்ட சொத்தாக அனுபவித்ததே இல்லை என்றால் சரியல்ல. ரவிமுதலியாரும், அவருடன் பிறந்து மூர்த்தி மற்றும் சம்பத் குமார் ஆகியோர் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் இல்லை. அந்த பாகப்பிரிவினையில் ரவிமுதலியாருக்கு 16 செண்டும், சம்பத் குமாருக்கும் 17 செண்டும் ஒதுக்கப்பட்டது என்றால் இல்லை. அவ்வாறு பாகப்பிரிவினை செய்ததில் ரவி

முதலியாருக்கு 15 3/4 செண்டு வந்தது என்றால் இல்லை. அதன்படி மூன்று பேரும் அவர்களுக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் இல்லை. மூர்த்தி முதலியாருக்கு பாகமாக வந்த சொத்தை 29.09.1981 அன்று பிரதிவாதி மனைவி கஸ்தூரி என்பவருக்கு கிரையம் செய்துவிட்டார் என்றால் எனக்கு அது தெரியாது. சம்பத் முதலியார் அவருக்கு பாகமாக வந்த சொத்தை மேற்சொன்ன கஸ்தூரி என்பவருக்கே 02.03.1982 அன்று கிரையம் செய்து விட்டார் என்றால் எனக்கு அது தெரியாது. கஸ்தூரி எனது அக்கா ஆவார். எனது சகோதரர் சேகர் எப்போது கிரையம் வாங்கினார் என்றால் தேதி, வருடம் ஞாபகம் இல்லை. சுமார் 30 வருடங்களுக்கு முன்பு கிரையம் வாங்கினார். எனது பிரமாண வாக்குமூலத்தில் சேகர் எப்போது கிரையம் வாங்கினார் என்று ஞாபகம் இல்லை என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அதில் என்ன உள்ளது என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது சகோதரி கஸ்தூரி கிரையம் வாங்குவதற்கு முன்பே சேகர் கிரையம் வாங்கிவிட்டார். ஒரு சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் பார்ப்பார்கள் என்றால் சரிதான். நானும், எனது சகோதரர்களும் இந்த சொத்தை வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் போட்டு பார்த்தோம் என்றால் சரிதான். சேகருக்கு கிரையம் கொடுத்த தேவபாலனே 20.02.1982 ல் தான் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தேதி சரியாக தெரியவில்லை. அதன் மொத்த விஸ்தீரனம் 46 செண்டு ஆகும். தேவபாலன் கிரையம் வாங்கியதற்கு முன்னரே கஸ்தூரி மூர்த்தி முதலியாரிடம் 1981ல் கிரையம் வாங்கினார் என்றால் அவர் தவறாக வாங்கியுள்ளார். அந்த கிரைய பத்திரத்தை நான் வாங்கி பாரத்தேனா என்றால் பார்த்துள்ளேன். ரவிமுதலியாரின் உடன் பிறந்த சகோதரர் மூர்த்தி தான் அதை கிரையம் செய்தார் என்றால் செய்திருக்கலாம். வில்லங்கம் போட்டு பார்த்தபோது அதில் தேவபாலன் கிரையம் வாங்குவதற்கு முன்னரே கஸ்தூரி 16 செண்டு கிரையம் வாங்கினார் என்று குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் வில்லங்க சான்றிதழில் அவ்வாறு இல்லை. வில்லங்க சான்றிதழில் அவ்வாறு தான் இருந்தது என்றாலும் வாதி

தெரிந்தே கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. மூர்த்தி முதலியாரிடமிடிருந்து கஸ்தூரி கிரையம் வாங்கிய காலத்தில் ரவி முதலியார் உயிருடன் இருந்தாரா என்றால் இல்லை. தேவபாலன் ரவிமுதலியாரிடமிருந்து கிரையம் வாங்கினார். கஸ்தூரி கிரையம் வாங்கிய காலத்தில் ரவி முதலியார் உயிருடனே இல்லை. தேவபாலன் ரவி முதலியார் மனைவி கீத்தாம்மாளிடமிருந்து கிரையம் வாங்கினார். இந்த தாவா சொத்தில் பிரதிவாதியின் மனைவி கஸ்தூரிக்கு மொத்தம் 31 செண்டு சொந்தம் என்றால் இல்லை. அவர் தவறாக வாங்கியுள்ளார். அந்த 31 செண்டு போக மீதம் உள்ள சொத்தை தான் ரவி முதலியாரோ அவருடைய வாரிசுகளோ கிரையம் செய்ய முடியும் என்றால் சரியல்ல. எனவே தேவபாலன் கிரையம் வாங்கியதே செல்லாது என்றால் சரியல்ல. தேவபாலனிடமிருந்து எனது சகோதரர் சேகர் கிரையம் வாங்கியது செல்லாது என்றால் சரியல்ல. எங்களுக்கும் எனது சகோதரர் சேகருக்கும் கஸ்தூரி கிரையம் வாங்கினார் என்பது தெரிந்திருந்தே பிரச்சனை ஏற்படுத்த வேண்டுமென்று நாங்கள் கிரையம் வாங்கினோம் என்றால் சரியல்ல. ஆரணி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.504/1982 வழக்கு குறித்து எனக்கு தெரியும். அந்த வழக்கு சேகர் கஸ்தூரி பேரில் போட்ட வழக்காகும். கஸ்தூரியம்மாள் கிரையம் வாங்கியது செல்லாது என்று தான் அந்த வழக்கை வாதி சேகர் தாக்கல் செய்திருந்தார். அநத வழக்கு ஆரணி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலிருந்து சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அசல் வழக்கு எண்.109/1988 என்று எண்ணிடப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு ஒரு தலைபட்சமாக தான் தீர்ப்பானது என்றால் சரிதான். அந்த ஒரு தலைபட்ச தீர்ப்பை இரத்து செய்யக்கோரி கஸ்தூரி நீதிமன்றத்தில மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டது. அந்த வழக்கை எனது சகோதரர் தாக்கல் செய்யவில்லை என்றாலும், தேவபாலன் தான் தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. அந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது சேகர் தன்னையும்

தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று மனு செய்து தான் சேர்க்கப்பட்டார் என்றால் எனக்கு அந்த விபரங்கள் சரியாக தெரியாது. வந்தவாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.397/1996 என்ற வழக்கை வாதி தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கை வாதி 46 செண்டு தனக்கு சொந்தமானது என்று சொல்லி தான் தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2025.09.18 18:45:11 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்